1979 மார்ச் 21]

திரு. என். லட்சுமிநாராயணன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மதுரையில் சுற்றுலாத்துறை பொருட்காட்சியை நடத்தியது. வருகின்ற ஆண்டிலும் சுற்றுலாத்துறையின் மூலம் பொருட்காட்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதா ? அத்துடன் மதுரை மாநகராட்சியிலிருந்து இந்த பொருட்காட்சியை நடத்த வேண்டும் என்று கேட்டு அனுமதி கேட்டிருக்கிறார்களா ? அப்படி கேட்டிருந்தால் அனுமதி வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி ஆகிய இவைகள், இப்படிப்பட்ட பொருட்காட்சிகளை நடத்துகிற பொழுது, மாநகராட்சி, நகராட்சிகளில் பணியாற்றும் அலுவலர்கள் நீண்ட நேரமும், அவர்களுடைய முழு நேரமும் இந்த வேலையில் ஈடுபட வேண்டியிருக்கும், அதன் காரணமாக அன்றாடம் நடைபெறவேண்டிய வேலைகள் தடைபடுகின்றன என்ற ஒரு குறைபாடு அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆகவே சென்ற ஆண்டு சுற்றுலாத் துறையின் மூலமாக பொறுப்பேற்று மதுரையில் பொருட்காட்சி நடத்தப்பட்டது. இந்த ஆண்டும் மதுரை மாநகராட்சி, அரசே இந்த பொருட்காட்சியை நடத்தவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதை ஒப்புக்கொண்டு சுற்றுலாத் துறையின் மூலமாக பொருட்காட்சி நடத்தலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : சென்ற ஆண்டு நடத்தப்பட்ட பொருட்காட்சியில் கிடைத்த வருமானத்தை அமைச்சர் அவர்கள சொன்னார்கள். இந்த ஆண்டு சுற்றுலாத் துறையின் மூலமாக நடத்தப்பட்ட பொருட்காட்சியில் வருமானம் என்ன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை. தனியாகக்கேள்வி போட்டால் அதற்கான தகவலை திரட்டிக் கொடுக்க முடியும். என்றாலும் இந்த ஆண்டு சென்ற ஆண்டை விடவும் அதிக லாபம் என்று தான் அறிகிறேன்.

கொல்லிமலை நீர் வீழ்ச்சி.

* வினா எண் 503—திரு. வ. சின்னசாமி: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொல்லிமலையில் உள்ள புகழ்பெற்ற கோவில் அரப்பளீசுவரர் ஆலயம் பகுதியில் உள்ள 300 அடி உயரத்தில் விழும் நீர் வீழ்ச்சி உள்ள இடத்தைச் சுற்றுலா ஸ்தலமாக அரசு மாற்ற உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. வ. சின்னசாமி : தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் ஆடி 18-க்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் புகழ்பெற்ற இந்த இடத்திற்கு வந்து 300 அடி உயரத்திலிருந்து விழுகின்ற நீர்வீழ்ச்சியையும் கண்டு களித்து செல்கின்றனர். இந்த நீர்வீழ்ச்சி சீரமைக்கப்படுமா ? மேலும் அறநிலையத்துறையின் சார்பில் அங்கு வருகின்றவர்களுக்கு தங்கும் வசதிக்காக தங்கும் விடுதிகள் போன்றவை, மின்சார வசதிகள் இவைகளை எல்லாம் செய்து கொடுக்க அரசு ஆலோசனை செய்யுமா ? இந்த இடத்தை அபிவிருத்தி செய்து ஒரு சுற்றுலா ஸ்தலமாக ஆக்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கொல்லிமலையிலுள்ள இந்த புகழ்பெற்ற அரப்பளீசுவரர் ஆலயமும், அதை சுற்றியுள்ள இயற்கைக் காட்சிகளும், அங்கு விழுகின்ற நீர்வீழ்ச்சியும் கவரக்கூடியதாக இருப்பதை மனதிற்கொண்டு, ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு செல்கிறார்கள் என்பதையும் அரசு அறிந்திருக்கிறது. அவர்களுக்கு அடிப்படை வசதிகளை இந்த இடத்தில் செய்து கொடுப்பதற்கு 15 லட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதை உடனடியாக மேற்கொள்ள இயலாது என்றாலும், வருகின்ற காலத்தில் இவற்றை கவனத்தில் வைத்து, இந்த வசதிகளை எல்லாம் இனிமேல் செய்வதற்கு அரசு ஆலோசித்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. மற்ற கேள்விகள் நாளை தொடரும்.

[முற்பகல் 10–00]

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவையில் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1978) திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றுள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.